*அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 16/2020*

எனது இலக்கம் :*Pns/P7/17*
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு *07.*

*2020.06.26*

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் / முப்படைத் தளபதிகள்

**<u>வைத்தியக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெறச் செய்யும் சந்தர்ப்பத்தில் ஓய்வு பெறச் செய்யப்படும் திகதியை தீர்மானித்தல்</u>**

ஓய்வூதிய பிரமாணக் குறிப்பின் *2.14* ஆம் பிரிவின் கீழ் வைத்தியக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெறச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில், உத்தியோகத்தரின் ஓய்வு பெறச் செய்யப்படும் திகதியை தீர்மானிக்கும் போது இதன்பிறகு பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல் வேண்டும்.

*02.* உத்தியோத்தர் வைத்தியச் சபைக்கு சமர்ப்பித்த திகதியை அடிப்படையாகக் கொண்டு ஓய்வு பெறச் செய்யப்படும் திகதி பின்வரும் வகையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*(அ)* அவ் உத்தியோகத்தர் வைத்திய சபைக்கு சமர்ப்பித்த திகதியின் பின்னர் சேவைக்கு சமூகமளித்திருந்தால் இறுதியாக சேவைக்கு சமூகமளித்த திகதி முதல் ஓய்வு பெறச் செய்யப்படுதல் வேண்டும்.

*(ஆ)* உத்தியோகத்தர் இறுதியாக சேவைக்கு சமூகமளித்த திகதிக்கு பிந்தைய திகதியொன்றில் அவ் உத்தியோகத்தர் வைத்திய சபைக்கு சமர்ப்பித்து இருப்பாராயின், இறுதியாக சேவைக்கு சமூகமளித்த திகதி முதல் வைத்திய சபைக்கு சமர்ப்பித்த்த திகதி வரை உத்தியோகத்தருக்கு உரித்தான விடுமுறைகளை வழங்கியதன் பின்னர் எஞ்சிய காலப்பகுதியை சம்பளமற்ற காலமாக கருதி வைத்திய சபைக்கு சமர்ப்பித்த திகதி முதல் ஓய்வு பெறச் செய்யப்படுதல் வேண்டும்.

ஒப்பம்/. ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள் –

| | | | |
|---|---|---|---|
| *01.* | சனாதிபதிச் செயலாளர் | - | தயவுடன் அறிந்து கொள்வதற்காக |
| *02.* | பிரதமர் செயலாளர் | - | தயவுடன் அறிந்து கொள்வதற்காக |
| *03.* | செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | - | தயவுடன் அறிந்து கொள்வதற்காக |
| *04.* | செயலாளர், நிதி, பொருளாதார மற்றும் கொள்கைகள் விருத்தி அமைச்சு | - | தயவுடன் அறிந்து கொள்வதற்காக |
| *05* | கணக்காய்வாளர் நாயகம் | - | அவசியப்படும் நடவடிக்கைக்காக |